[திரு. ஆர். முருகையா பாண்டியன்] [1991 செப்டம்பர் 9

இப்படி ஒரு அருமையான பட்ஜெட்டை தாக்கல் செய்த நிதியமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி, காவல் தெய்வம், முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, வாய்ப்புக்கொடுத்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

5. அறிவிப்பு.

உறுப்பினர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒரு நினைவூட்டுச் செய்தி. இன்று மாலை 5–00 மணிக்கு உறுப்பினர்களின் பயிற்சிக் கருத்தரங்கு நடைபெறுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நினைவூட்டிக் கொள்கிறேன். கருத்தரங்கிற்கு புதிய உறுப்பினர்கள் மட்டுமல்லாமல் மூத்த உறுப்பினர்களும் வந்து கலந்துகொள்ள வேண்டுமென்று அவர்களையும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றது. பேரவை மீண்டும் நாளை 10–9–1991 செவ்வாய்க்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-08 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

31. உள்துறையின் 15–10–1973ஆம் நாளிட்ட II-1/5208/1973ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்வது குறித்து உள் துறையின் 7-11–1990ஆம் நாளிட்ட 2426ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

32. காவல் துறையினரை புறநகர்ப் பகுதிகளுக்கு ஏற்றிச் செல்லும் பொருட்டு வாடகைக்கு அமர்த்தப்பட்ட பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் சில பேருந்துகளுக்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்களித்தல் குறித்து உள் (போக்குவரத்து-அ) துறையின் 7–11–1990ஆம் நாளிட்ட 2427ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].